1971 டிசம்பர் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அலுமினியப் பாத்திரங்களை ஏழைகள் பயன்படுத்துகிறார்கள். பணக்காரர்கள் எவர்சில்வர் பாத்திரங்களைப் பயன் படுத்துகிறார்கள். எனவே அதிகமான அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையில் இல்லாவிட்டாலும், பொதுத்துறையிலாவது, ஏழை மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் 25 ஆயிரம் டன் அலுமினியம் உற்பத்தி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்குத் தேவையான அலுமினிய பாக்ஸைட்தான் கிடைத்து வருகிறது. அதுவும் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்களை வெளி மாநிலங்களிலிருந்துதான் பெறவேண்டியதிருக்கிறது.

திருமணத்திற்கான குறைந்த வயது வரம்பு

*274 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமணம் செய்து கொள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் குறைந்த பட்ச வயது நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, குறைந்தபட்ச வயதை நிர்ணயம் செய்வதன் மூலம் குழந்தைகள் பெறுவது குறையும் என்று அறிஞர்கள் சொல்கிறார்களே, அதை ஏற்று, திருமண வயதை நிர்ணயம் செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1955-ம் ஆண்டு திருமணச் சட்டப்படி, திருமண வயது ஆண்களுக்கு 18 என்றும், பெண்களுக்கு 15 என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது மத்திய அரசு திருமண வயதை ஆண்களுக்கு 21 என்றும், பெண்களுக்கு 18 என்றும் உயர்த்தலாமா என்று கேட்டிருந்தார்கள். அவ்வாறு நிர்ணயித்தால் நலமாக இருக்கும் என்று கருதி, அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, 21, 18 என்று வயதை உயர்த்தினாலும் கூட, இப்போது இரண்டு நிமிடங்களுக்கு மூன்று குழந்தைகள் என்ற வீதத்தில் குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கின்றன. இந்த வயது நிர்ணயத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட்டால் பிறப்பு விகிதத்தை இன்னும் தடுக்க முடியும். எனவே 21 வயது என்றிருப்பதை 25-ஆக உயர்த்துவதற்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதுதான் அதற்கு மத்திய அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது. இதற்கிடையில் இன்னும் கொஞ்சம் தள்ளிப் போடுவது என்பது இப்போது முடியுமா ? வயதானவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கின்றன.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, திருமண வயதை உயர்த்திக் கொண்டே போனால் இந்த நாட்டின் சீதோஷ்ண நிலையின் காரணமாக, மொராலிட்டி கெட்டுவிடும் என்று பேரறிஞர்கள் சொல்கிறார்கள். எனவே அரசு இதைப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் உறுப்பினர் இப்போதுதான் பெண் பார்த்திருக்கிறார். ஆகவே அவசரப்படவேண்டாம்.

திரு. அ. தியாகராசன் : மேல்நாடுகளில் 40 வயது, 50 வயது ஆனபிறகு தான் ஆடவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். அதனால் அவர்கள் நலமாகவும், திடகாத்திரமாகவும் நல்லமுறையில் இருக்கிறார்கள். அந்த முறையை நம்முடைய நாட்டிலும் கடைப் பிடிக்க அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேல்நாடுகளில் 40, 50 வயதானபிறகு தான் திருமணம் செய்துகொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை அது இரண்டாவது திருமணமாகக்கூட இருக்கலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, சில இடங்களில் திருமணம் ஆகாமலேயே குழந்தைகள் பிறக்கின்றன. அதைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நல்லவர்களைப் பற்றித்தான் நாம் கவலைப்பட வேண்டும்.

வைகை அணை

* 275 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வைகை அணைப்பகுதியில், மைசூர் பிருந்தாவனம் போன்று அமைப்பினை ஏற்படுத்துவதற்கு அரசு செயல் திட்டம் வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) மைசூர் பிருந்தாவனத்தில் உள்ளதுபோல் பூங்காவும் தோட்டங்களும் முன்னரே வைகை அணைப்பகுதியில் இருக்கின்றன. மின்விளக்குகளை புதுப்பித்து தோட்டங்களுக்கும், பூங்காக்களுக்கும் அதிக ஒளியூட்டும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, தென் மாவட்டத்தில் வைகை டாம் பகுதியில் சுற்றுலா மாளிகை ஒன்றை அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அதை விரைவு படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கே. சாதிக் பாட்சா : பின்தங்கிய வகுப்பு நல அமைச்சர் அவர்கள் வைகை அணைப்பகுதியில் ஏராளமான விளக்குகளைப் போட்டு, மைசூர் பிருந்தாவனத்தைப்போல் அழகுபடுத்தினால் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் இருக்கும் என்ற குறிப்பினை அனுப்பி